இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 16.09.2026

# கையாலாகாத உதவாக்கரை அரசு!

மூன்று நாள் விடுமுறை என்பது முன்கூட்டியே எப்போதோ தெரியும். வெளியூருக்கு மக்கள் அதிகம் செல்வார்கள் என்பதையும் அரசாங்கம் அறியும். அதற்கேற்ப பேருந்துகளை அதிகப்படுத்தி விட வேண்டும் என்ற அறிவே இல்லை த.வெ.க. அரசுக்கு.

**கிளாம்பாக்கம் பேருந்து நிலையமே அவதிக்கு உள்ளாகியது. பல்லாயிரக்கணக்கான மக்கள் பல மணி நேரமாக பேருந்துகள் கிடைக்காமல் திணறினார்கள். காத்துக்கிடந்தார்கள். எத்தனை மணி நேரம் காத்திருந்தும் பேருந்துகள் கிடைக்காமல், ஊருக்குச் செல்ல முடியாமல் வீடு திரும்பினார்கள். போக்குவரத்துத் துறை அமைச்சராக இருக்கும் விஜய் பார்த்திபன் என்பவரைக் காணவே இல்லை.**

‘தி.மு.க. ஆட்சியில் இருந்தால் இந்த நிலைமை இருக்குமா? அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் இரவு எத்தனை மணி ஆனாலும் கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில்தான் இருப்பார்’ என்று பேருந்து கிடைக்காத பயணிகள் சிலர் இப்போது சமூக வலைத்தளத்தில் பதிவு போட்டு என்ன பயன்?

‘விஜய்க்கு தான் நாங்கள் வோட்டுப் போட்டோம்... இப்படி ராத்திரியில் புலம்ப வைத்து விட்டார்’ என்று இப்போது வருந்தி என்ன பயன்? ‘அவர் தோழியுடன் கார் ரேஸ் பார்க்கப் போய்விட்டார்’ என்று இப்போது கோபப்பட்டு என்ன பயன்?

**ஆட்சிக்கு வந்த புதிதில் பேருந்து நிலையத்தை ஆய்வு செய்யப் போனார் அமைச்சர் விஜய் பார்த்திபன். ஒரு இளைஞர் தனது ஊருக்கு பேருந்து வரவில்லை என்றார். குறிப்பிட்ட நேரத்துக்கு பேருந்து வரவில்லை என்ற ஆதங்கத்தில் ஒரு இளைஞர் கேட்கிறார். அதற்கு போக்குவரத்து துறை அமைச்சர் பார்த்திபன் சொன்ன பதில் என்ன தெரியுமா?’ நீங்க நல்லா சாப்பிட்டுட்டீங்க... நான் இன்னும் சாப்பிடல’ என்கிறார் பார்த்திபன். பஸ் வரலை என்பதற்கு இதுதான் பதிலா?’ நீங்க நல்லா சாப்பிட்டுட்டீங்க... நான் இன்னும் சாப்பிடல’ என்பதையே பத்து தடவை சொல்கிறார் பார்த்திபன். நிலைமையின் மோசத்தை புரிந்து கொண்டு போலீஸ் அதிகாரி ஒருவர், அந்த இளைஞரை போகச் சொல்கிறார். அந்த இளைஞரை போகவிடாமல் தடுத்து நிறுத்தி,’ நீங்க நல்லா சாப்பிட்டுட்டீங்க... நான் இன்னும் சாப்பிடல’ என்கிறார் பார்த்திபன். இப்படி ஒருவரை அமைச்சராக வைத்திருந்தால் இப்படித்தான் ஒவ்வொரு நாளும் மக்கள் அவதிப்பட வேண்டும்.**

உரிய நேரத்தில் பேருந்துகள் இல்லாததால் அலைமோதுகிறது பயணிகள் கூட்டம்.கிடைக்கும் பேருந்துகளில் முண்டியடித்து செல்லும் சூழல் ஏற்பட்டது. காலை முதல் பேருந்துக்காக பல மணிநேரம் காத்திருக்கும் அவலத்தைத்தான் பார்க்க முடிந்தது.

விஜய் அரசின் அலட்சியத்தால் பேருந்து மேற்கூரையில் ஏறி பயணிக்கும் அவலக் காட்சியைப் பார்த்தோம். இவை எல்லாம் உத்திரப் பிரதேசத்திலோ, பீகாரிலோ நடக்கும் காட்சிகள். அதை தமிழ்நாட்டில் பார்க்கிறோம். திராவிட மாடல் ஆட்சியில் கோடிக்கணக்கில் பணம் கொடுத்து பல்லாயிரக்கணக்கில் வாங்கப்பட்ட பேருந்துகள் அனைத்தையும் எடுக்காமல் வைத்துவிட்டு, மக்களை மேற்கூரைகளில் பயணிக்க வைப்பது சேடிஸ்ட் மனப்பான்மை அல்லவா?

பேருந்து மேற்கூரையில் ஏறி பயணிக்கும் அவலக் காட்சிகளை சமூக வலைதளங்களில் வீடியோவாகப் போட்டு, ‘இது உத்தரப்பிரதேசமோ, பீகாரோ அல்ல.. தமிழ்நாடுதான்..’ என்று போட்டுள்ளார்கள். இதைப்பார்க்கும் போது யாரை நொந்து கொள்வது?

சொந்த ஊர்களுக்குச் செல்ல போதிய பேருந்து வசதி இல்லாமல் மக்கள் திண்டாடும் நிலையில் போக்குவரத்துத் துறை அமைச்சர் பார்த்திபன் எங்கும் வரவில்லை. முதலமைச்சர் விஜய் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் பார்த்திபன் ஆகியோரை காணவில்லை என சமூகவலைதளங்களில் விமர்சனம் வந்துள்ளது.

**போதிய அரசுப் பேருந்து இல்லாததால் தனியார் பேருந்தில் அதிக கட்டணம் செலுத்திச் செல்வதாக பயணிகள் சொல்கிறார்கள். ‘அரசு நிர்ணயித்த கட்டணமே வசூலிக்கப்படும்’ என்று சொன்னது த.வெ.க. அரசு. சொன்னவர்களைக் காணவில்லை. ‘த.வெ.க. ஆட்சியில் லஞ்சம் வாங்காததால், ஆம்னி பேருந்துகள் அரசு நிர்ணயித்த கட்டணத்தை மட்டும்தான் வாங்கும்’ என்று பீற்றிக் கொண்டார்களே அந்த யோக்கியர்கள் எங்கே?வரலாறு காணாத அளவுக்கு ஆம்னி பஸ்களின் கட்டணத்தை உயர்த்தியதன் பெயர்தான் மாற்றமா?**

சாதாரணமான கட்டணக் கொள்ளை அல்ல. ஆம்னி பேருந்துகளில் ரூ.3000 முதல் ரூ.5000 வரை அப்பட்டமான கொள்ளை கடந்த மூன்று நாட்களில் நடந்துள்ளது. அரசு பேருந்துகள் இல்லாமல் கிளாம்பாக்கத்தில் மக்களை பரிதவிக்க வைத்துது கூட சதிச் செயலா? அவர்களை ஆம்னி பேருந்துகளில் செல்ல வைப்பதற்காகத் தான் பேருந்துகள் நிறுத்தப்பட்டதா? விஜய் அரசின் புதுவிதமான ஊழல் இது என்று கூடச் சொல்லலாம். தனியார் பேருந்து அதிபர்களை அமைச்சர் சந்தித்தது பற்றி புலனாய்வு பத்திரிக்கைகள் பல வாரங்களுக்கு முன்பே செய்தி வெளியிட்டுள்ளன.

**தேவையான பேருந்தை உடனடியாக அனுப்ப வக்கற்ற விஜய் அரசு, இன்ஸ்டா ரீல்ஸ் போடும் ஆட்களை கிளாம்பாக்கத்துக்கு அனுப்புகிறது. “கூட்டமே இல்லை, பஸ் ப்ரீயா இருக்கு” என ரீல்ஸ் போட வைத்துள்ளது. இவர்களுக்கு ரீல்ஸ் தவிர ஏதும் தெரியாது. ஆளத் தெரியாத கையாலாகாத உதவாக்கரை அரசு தான் இது என்பதை விஜய் தினந்தோறும் மெய்ப்பித்து வருகிறார்.**

●●

## தமிழ்நாட்டிற்கு பாதுகாப்பு வளையமிட்ட

# அண்ணா - என்றும் நம்மை வழிநடத்துவார்!

### எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, செப். 16 -**

**பேரறிஞர் அண்ணா பிறந்த நாளையொட்டி சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், தமிழ்நாட்டிற்கு பாதுகாப்பு வளையமிட்ட அண்ணா என்றும் நம்மை வழிநடத்துவார் என்று குறிபிட்டுள்ளார்,**

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-






**பேரறிஞர் அண்ணா எனும் ஜனநாயக பெரு வெளிச்சம் பிறந்த நாள் இன்று!**

**கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்ற முழக்கத்தோடு தி.மு.கழகத்தை தொடங்கி, தமிழ்நாட்டிற்கு பாதுகாப்பு வளையமிட்டவர் அண்ணா!**

**தமிழ்நாடு என்று பெயர்சூட்டி சுயமரியாதை திருமணத்துக்கு சட்ட அங்கீகாரம் தந்து இருமொழி கொள்கையை உறுதி செய்த பேரறிஞர் அண்ணா தான், அன்றைக்கும் இன்றைக்கும் என்றைக்கும் தமிழ்நாட்டை ஆள்கிறார்.**

**தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் தமிழ்மொழியின் ஏற்றத்துக்கும் மாநில சுயாட்சிக்காகவும் குரல் கொடுத்த அண்ணா என்றும் நம்மை வழிநடத்துவார். வாழ்க அண்ணாவின் புகழ்!**

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## மதுராந்தகம் – தாராபுரம் தொகுதிகளில்

# கழக வேட்பாளர்கள் வேட்பு மனுத் தாக்கல்!

### வெற்றி உறுதி என பேட்டி!

மதுராந்தகம், செப். 16 –

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர்கள் பரந்தாமன் மற்றும் எஸ்.சுகன்யா ஆகியோர் தங்களின் வேட்பு மனுக்களை தாக்கல் செய்தனர்.

மதுராந்தகம் மற்றும் தாராபுரம், சட்டமன்றத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் அக்டோபர் 6ம் தேதி நடைபெறுகிறது. இதற்கான வேட்பு மனுத் தாக்கல் கடந்த 9ம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் பரந்தாமன், தேர்தல் நடத்தும் அதிகாரி நரேந்திரனிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

இந்நிகழ்வின் போது, மாவட்டச் செயலாளர்கள் தா.மோ.அன்பரசன், க.சுந்தர், மாநில இளைஞரணி துணை செயலாளர் அப்துல்மாலிக், நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் உள்ளிட்டவர்கள் உடனிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய பரந்தாமன், த.வெ.க. அரசின் நடவடிக்கைகள் ஏமாற்றம் அளிப்பதாக உள்ளதாகவும், இத்தேர்தலில் தி.மு.க. வெற்றி பெறுவது உறுதி என்றும் கூறினார்.

**தாராபுரம்!**

இதேபோல், தாராபுரம் தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் வழக்கறிஞர் எஸ்.சுகன்யா, தாராபுரம் கோட்டாட்சியர் பெலிக்ஸ் ராஜாவிடம் தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்தார்.

அப்போது, துணைப் பொதுச் செயலாளர் மு.பெ.சாமிநாதன், கிழக்கு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன், முன்னாள் அமைச்சர் கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் பிரகாஷ் ஆகியோர் உடனிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய மு.பெ.சாமிநாதன், த.வெ.க. ஆட்சியில் அனைத்து தரப்பு மக்களும் மிகுந்த இன்னலுக்கு உள்ளாகி வருவதாகவும், இத்தேர்தலில் தி.மு.க. வெற்றி பெறுவது உறுதி எனறும் தெரிவித்தார்.

இரண்டு தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில், வேட்புமனுத் தாக்கல் செய்ய நாளை இறுதி நாள். வேட்பு மனுக்கள் மீது 17ம் தேதி பரிசீலனை நடைபெறுகிறது. வேட்புமனுவை திரும்பப் பெற செப்.19ம் தேதி கடைசி நாள் ஆகும். அக்.9ம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளது.



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் இ.பரந்தாமன் வருவாய் கோட்டாட்சியர் நரேந்திரன் அவர்களிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். உடன் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர்களும், மாவட்டச் செயலாளர்களுமான தா.மோ.அன்பரசன் மற்றும் க.சுந்தர், க.செல்வம் எம்.பி. உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் தாராபுரம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர், வழக்கறிஞர் எஸ்.சுகன்யா தனது வேட்பு மனுவினை தேர்தல் நடத்தும் அலுவலர் ஆ.பெலிக்ஸ் ராஜாவிடம் வழங்கினார். இதில் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில், மாவட்டக் கழகச் செயலாளர் இல.பத்மநாபன், கழக மகளிர் அணி துணை செயலாளர் – முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் உள்ளனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளையொட்டி சென்னை வள்ளுவர் கோட்டத்தில் அமைந்துள்ள அண்ணா சிலைக்குக் கீழே வைக்கப்பட்டிருந்த அண்ணா உருவப் படத்திற்குத் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் மலர் தூவி மரியாதை செய்தார். உடன் கழகத் துணைத் தலைவர் கலி.பூங்குன்றன், கழகப் பொருளாளர் வீ.குமரேசன், கழக செயலவைத் தலைவர் வழக்குரைஞர் வீரமர்த்தினி மற்றும் தோழர்கள் உள்ளனர்.